விண்ணப்பப்படிவத்துடன் கீழே கூறப்பட்ட சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் அவசியம்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) சமீபத்தில் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ். (பிரதேச செயலாளராயின் கையொப்பம் இடல் வேண்டும்) ;
(iv) சமீபத்தில் பெற்றுக்கொண்ட நற்சாட்சிப்பத்திரம் ;
(v) வேறு ஏற்புடைய தகைமைகளின் சான்றிதழ்கள்.

கே. எம். டபிள்யு. பிரேமசந்திர,
மாநகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா,
2013.02.28.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**கம்பஹா மாநகர சபை**

*மேல் மாகாண உள்ளூராட்சி அரச சேவையின் சாரதி II "ஆ" தரம் பதவிக்கு ஆட்சேர்த்தல்*

1. முதல் எழுத்துக்களுடன் பெயர்கள் :-----.
2. முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
4. நிரந்தர முகவரி :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :------.
6. ஆண்/பெண் :-----.
7. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
8. இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா அல்லது பதிவு செய்யப்பட்டதன் மூலமா :----.
9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை தொடர்பான விபரம்) :----.
   சித்தியடைந்த அதிகூடிய வகுப்பு/தரம் :----.
10. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ் உறுதிப்படுத்தல் வேண்டும்) :-----.
11. சேவை அனுபவம் :-----.
12. நீங்கள் எப்பொழுதேனும் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்டுள்ளீரா? :------.

மேலே கூறப்பட்ட விடயங்கள் எனக்குத் தெரிந்த வரை சரியானதும் உண்மையானதும் என உறுதிசெய்கிறேன். ஆட்சேர்க்கும் நிபந்தனைகளின் பிரகாரம் நான் சமர்ப்பிக்கும் தகவல்கள் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டு நியமனம் வழங்க முன்னர் நான் சமர்ப்பித்தவை பிழை என உறுதிப்படுத்தப்பட்டால் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என அறிவேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

3-708/3

---

**தொடங்கொடை பிரதேச சபை**

பதவிகள் வெற்றிடம்

தொடங்கொடை பிரதேச சபையில் வெற்றிடங்களாயுள்ள மேல் மாகாண அரச சேவையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு ஆகக்குறைந்த தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தொடங்கொடை பிரதேச சபை நிருவாக எல்லைகளுக்குள் அண்மைய 3 வருடங்களாக நிரந்தர வதிவாளராகவுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் ஏலவே நிரந்தர, தற்காலிக, அமய, பதலீட்டு, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் சேவையாற்றுவோருக்கும் விசேட கவனம் செலுத்தப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | துறை வேலை நிருவாகத்தர் தரம் II | 01 | பொ.நி.சு. 06/2006 iv இறகமைய எம்என் 1- 2006ஏ ரூபா 13,120-10×145-11×270-10×240-10×320-ரூபா 22,040 vii படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (1) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br>அல்லது<br>(2) தேசிய கல்வி பொது தராதரப்பத்திரப் பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(3) தற்போது உள்ளூராட்சி நிறுவனத்தில் 10 வருடத்திற்குக் குறையாத தொடர் சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பின் விண்ணப்ப தாரிகள் 08 ஆந் தரத்தில் சித்தி பெற்றிருத்தல். |
| 02 | சுகாதார நிருவாகத்தர் தரம் II | 01 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய எம்என் 1- 2006ஏ ரூபா 13,120-10×145-11×270-10×240-10×320-ரூபா 22,040 vii படிநிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (1) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம் மற்றும் தேகாரோக்கியமும் உடலியல் விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட 5 பாடங்களில் திறமைச்சத்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(2) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம் மற்றும் தேகாரோக்கியமும் உடலியல் விஞ்ஞானம்/விஞ்ஞானம் உட்பட ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>(3) உள்ளூராட்சி நிறுவனத்தில் நிரந்தர பதவி வகித்தல். |
| 03 | சாரதிகள் (பாரமற்ற வாகனங்கள் சாரதி வகுப்பு II ஆ | 01 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய பீஎல் 2- 2006ஏ ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,860 vii படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | கல்வி பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் ஆகக்குறைந்தது 8 ஆந் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**தொழில்சார் தகைமைகள்:**<br>(அ) பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 34 அந்தரிற்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பாரமற்ற வாகனங்கள் செலுத்துவதில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும்.<br>(ஆ) திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | மோட்டார்வண்டி பரீட்சிப்பவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.<br>(இ) குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்.<br>(ஈ) இரவு மற்றும் பகல் காலங்களில் சேவை யாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும்.<br>(உ) பெருவீதிகள் சம்பந்தமான சட்ட கோவைப்பற்றி நல்ல அறிவிருத்தல் வேண்டும். |
| 04 | தகனச்சாலை இயக்குநர் III ஆம் தரம் | 02 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய பீஎல் 1- 2006ஏ ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,600 vii படிநிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | தேசிய கல்வி பொது தராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**தொழில்சார் தகைமைகள்:**<br>பதவிக்குரித்தான ஆகக்குறைந்தது இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.<br>(அரசில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றின் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.) |
| 05 | தகனச்சாலை இயக்குநர் உதவியாளர் III ஆம் தரம் | 02 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய பீஎல் 2- 2006ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 iv படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண்தடை உண்டு. | ஆகக்குறைந்தது 8 ஆந் தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.தொழில்சார் தகைமை இருத்தல் வேண்டும். |
| 06 | துறைசார் வேலை ஊழியர் III ஆம் தரம் | 02 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 iv படிநிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண்தடை உண்டு. | ஆகக்குறைந்தது 5ஆந் தரத்தில் (ஆண்டு 6) சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 07 | சுகாதாரத் தொழிலாளி III ஆம் தரம் | 02 | பொ.நி.சு. 06/2006 iv இற்கமைய பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 iv படிநிலையிற்கு முன்னர் வினைத்திறமைகாண்தடை உண்டு. | கல்வித்தகைமை கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |
| 08 | நூல்நிலைய உதவியாளர் II ஆம் தரம் | 02 | பொ.நி.சு. 06/ 2006 iv இற்கமைய பீஎல் 1- 2006ஏ ரூபா 13,060-10×130-10×145- ரூபா 15,680 vii படிநிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண்தடை உண்டு. | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**தேவையான ஏனைய தகைமைகள்**.- *1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)*

*2. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;*

*3. விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர பதிவாளராக இருத்தல் வேண்டும்.*

*4. தொடங்கொடை பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் வதியும் விண்ணப்பதாரிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.*

*5. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுமுடையவராகவிருத்தல் வேண்டும்;*

*6. குற்றச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;*

*7. அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.*

*8. தற்போதும் தொடங்கொடை பிரதேச சபையில் அப்பதவிகளில் அமய, பதிலீட்டு, கொடுப்பனவுமீது ஒப்பந்த அல்லது கூலி அடிப்படையின்கீழ் சேவையாற்றுவோருக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.*

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும்**:

*(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.*

*(2) விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்தல் வேண்டும்;*

*(3) இப்பதவிக்கு நியமனம்பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர்.*

*(4) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபனக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரச அல்லது மேல் மாகாண சபையினால் காலத்திற்குக்காலம் விநியோகிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமானதாகும். அதற்கமைய செயற்படுவதற்கும் நியமனம்பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.*

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்**.- *(1) சட்டப்படியான நேர்முகப்பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;*
*(தேவைக்கமைய எழுத்துமூல/கட்டமைப்பு)*

*(2) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-*

*(1) பிறப்புச் சான்றிதழ் ;*
*(2) தேசிய அடையாள அட்டை ;*
*(3) கல்விச் சான்றிதழ் ;*
*(4) நிரந்தர வதிவை நிரூபிக்கும் பிரதேச செயலாளரின் சான்றிதழ்;*
*(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும். அது பிரதேச செயலாளரினால் சுருக்கெழுத்தொப்பம் இடப்படல் வேண்டும்.)*
*(5) தொழில்சார் அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;*
*(6) ஏலவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபாரிசு சான்றிதழுடன் அனுப்புதல் வேண்டும்.*

*ஆட்சேர்ப்பு சட்டவிதிகளுக்கமைய பெறுகின்ற அதியுயர் புள்ளிகளிற்கமைய தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்.*

*06. ஆரம்ப தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்.*

*07. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து 31.03.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், தொடங்கொடை பிரதேச சபை, தொடங்கொடை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுப் பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தபாலில் காணாமல் போனதாக, திருத்தமாக முகவரி எழுதப்படாது திருப்பியனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்க மாட்டாதென்பதுடன் விண்ணப்ப திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் தொடங்கொடை பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

எச்.ஏ.சுஜன்த,
செயலாளர்,
தொடங்கொடை பிரதேச சபை,

பிரதேச சபை,
தொடங்கொடை,
28.02.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொடங்கொடை பிரதேச சபை**

........................................ பதவி

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர்:-----.
முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.

2. தபால் விலாசம் :-----.

3 தொலைபேசி இலக்கம் :-----.

4. பிறந்த திகதி : ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

5. விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது: வருடங்கள்:-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

7. பால்(ஆண்/பெண்):-----.

8. விவாகமானவரா? விவாகமாகாதவரா?:.............................................

9. தேசிய இனம்:.............................................

10. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரைமூலமாகவா? பதிவின்மூலமாகவா?:...................................

11. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :........................................................................

12 நீர் தற்போதும் இப்பிரதேச சபையில் சேவையாற்றுகின்றீராயின்,
I. தற்போது வகிக்கும் பதவி :-----.
II. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
III. அப்பதவியின் தன்மை : (நிரந்தர/அமய/தற்காலிக/பதிலீட்டு/ஒப்பந்த/செயற்றிட்ட அடிப்படையில்) :-----.

13. அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என ஊறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-656

## களுத்துறை பிரதேச சபை

பதவிகள் வெற்றிடம்

களுத்துறை பிரதேச சபையில் வெற்றிடங்களாயுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஆகக்குறைந்த தகைமைகளுள்ள களுத்துறை பிரதேச சபையின் நிருவாக பிரதேசத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி தகைமைகள் | | ஏனைய தகைமைகள் | சம்பள அளவுத்திட்டம் | ஆட்சேர்ப்புச்செய்தல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்ளக | வெளிவாரி | | | |
| 01 | சாரதிகள் II ஆ | 03 | ஆகக்குறைந்தது 8ஆந் தரம்/ ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | • பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்தரிற்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>• வாகனங்கள் செலுத்துவதில் ஆகக்குறைந்தது 3வருட அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ்களின்மூலம் நிரூபித்தல் வேண்டும்)<br>• குறைந்தது 5அடி உயரம் இருத்தல் வேண்டும்.<br>• இரவு மற்றும் பகல் காலங்களில் சேவையாற்றக் கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும்.<br>• பெருவீதிகள் சம்பந்தமான சட்டகோவைப் பற்றி நல்ல அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும். | ரூபா 12,470-10×130-10×145-10× 160-12×170- ரூபா 18,860 iv படிநிலையிற்கு முன்னர் வினைத் திறமைகாண் தடை உண்டு. | ஒழுங்கமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சை மூலம் மற்றும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையின் மூலமும் |
| 02 | சுகாதாரத் தொழிலாளி | 15 | கல்வித் தகைமை கருத்திற் கொள்ளப் படமாட்டாது. | கல்வித் தகைமை கருத்திற் கொள்ளப் படமாட்டாது. | | ரூபா 11,730-10×120-10×130-10×145-12× 160- ரூபா 17,600 | தகுந்த தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைமூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். |

02.**ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள்.**-(i) விண்ணப்பதாரிகள்இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதொல்லை ஏற்புடைத்தாகாது.

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர பதிவாளராக இருத்தல் வேண்டும்.

(iv) களுத்துறை பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் வதியும் விண்ணப்பதாரிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

(v) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுமுடையவராகவிருத்தல் வேண்டும்;

(vi) குற்றச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது;

(vii) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;

(viii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராக இருத்தல் வேண்டும்;

(ix) தற்போதும் களுத்துறை பிரதேச சபையில் அப்பதவிகளில் அமய, பதிலீட்டு, ஒப்பந்த (வேலை கூறுகளில்) சேவையாற்றுவோருக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

(x) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் மேல் மாகாண இப்பதவிகளுக்குரிய ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விதிகளின் ஏற்பாடுகளை திருத்துதல் அல்லது ஏற்பாட்டை பதிலீடுசெய்தல் ஆட்சேர்ப்பை தாமதித்தல் மாற்றஞ்செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் களுத்துறை பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

03. **சேவை நிபந்தனைகளும் நியதிகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவிக்கு நியமனம்பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். நிரந்தர பதவியை வகிப்போர் ஒரு வருடகால தகுதிகூர் நிலையில் வைக்கப்படுவர்.

(ii) விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்தல் வேண்டும்;

(iii) அரசகரும மொழி முறைமைக்கு சம்மதித்தல் வேண்டும்;

(iv) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபனக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரச அல்லது மேல் மாகாண சபையினால் அல்லது களுத்தறை பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் விநியோகிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கு நியமனம்பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

04. தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சையிற்கு அழைக்கப்படுவர் அத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ்;
(2) கல்விச் சான்றிதழ்;
(3) தேசிய அடையாள அட்டை;
(4) நிரந்தர வதிவை நிரூபிக்கும் பிரதேச செயலாளரின் சான்றிதழ்;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும். அது பிரதேச செயலாளரினால் சுருக்கெழுத்தொப்பம் இடப்படல் வேண்டும்.)
(6) ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;
(7) அனுபவம் பற்றிய சான்றிதழ்.

05. **விண்ணப்பிக்கும் விதம்**.-விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 12"×8" அளவிலான விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதி, 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளுடன் 29.03.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், களுத்துறை பிரதேச சபை, களுத்துறை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

கீதானி டி. லொக்குவெல்ல,
செயலாளர்,
களுத்துறை பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**களுத்துறை பிரதேச சபை**

.................................................. பதவி

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.
2. நிரந்தர விலாசம் :-----.
3. பிறந்த திகதி: ஆண்டு:-----, மாதம் :-----, திகதி :-----.
4. பால்(ஆண்/பெண்) :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
6. தொலைபேசி இலக்கம் :-----.
7. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :-----.

8. கல்வித் தகைமைகள் :-----.

8.1 விண்ணப்ப முடிவுத்திகதியன்று சித்திசயடைந்த வகுப்பு :-----.

8.2 க.பொ. த. (சா.த.) பரீட்சை :

(i) ஆண்டு :-----. மாதம் :-----.

(ii) சுட்டிலக்கம் :-----.

(iii) பெறுபேறு:

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

8.3 க.பொ. த. (உ.த.) பரீட்சை:

(i) ஆண்டு :-----. மாதம் :-----.

(ii) சுட்டிலக்கம் :-----.

(iii) பெறுபேறு:

| பாடம் | சித்தி |
|---|---|
| | |

9. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :-----.

10. ஏனைய தகைமைகள் :-----.

11. நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவதுதண்டிக்கப்பட்டுள்ளீராயின் தண்டனைப் பற்றிய விபரம் :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-633

# நானாவித அறிவித்தல்கள்

## ருவன்வெல்ல பிரதேச சபை

*மதிப்பீட்டு வரி அறவிடல் - 2013*

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13 - I இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2013 ஆம் வருடத்திற்காக விதிக்கப்படுகின்ற குறித்த மதிப்பீட்டு வரியினை ஒவ்வொரு காலாண்டினுள்ளும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2013 ஆம் வருடத்திற்கான மொத்த மதிப்பீட்டு வரி 2013, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டால் அந்த மொத்த மதிப்பீட்டு வரியில் பத்து வீதம் (10%) கழிவும் ஒவ்வொரு காலாண்டிற்குமான மதிப்பீட்டு வரி குறித்த ஒவ்வொரு காலாண்டினதும் முதல் மாதத்தின் கடைசித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டால் ஐந்து வீதம் (5%) கழிவும் வழங்கப்படும்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

### பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் -

(அ) 146 ஆம் உப பிரிவின் 1 ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றப்பட்ட பிரதேசம்/பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேசம்/பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களின் 2012 இல் காணப்பட்ட வருடாந்தப் பெறுமதியினை 2013 ஆம் ஆண்டின் வருடாந்தப் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கு,

(ஆ) 134 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையை முன்னேற்றப்பட்ட பிரதேசம்/ பிரதேசங்களாக ருவன்வெல்ல நகர அதிகார எல்லைப் பிரதேசத்தில் இலக்கம் 01 முதல் இலக்கம் 07 வரை உள்ள பிரதேசங்களில் அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் ஏழு வீத (7%) மதிப்பீட்டு வரியினையும், கலபிடமட, கோனகல்தெனிய, அமிதிரகல, கன்னத்தோட்டை போன்ற முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிலையான சொத்துக்களின் மீதும் நான்கு வீத (4%) மதிப்பீட்டு வரியினையும் ;

(இ) 134 ஆம் பிரிவின் 6 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப மேலே கூறப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு வரியினை 2013 மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆம் திகதிகளில் முடிவுருகின்ற 04 காலாண்டினுள்ளும் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென கட்டளையிடுவதற்கு ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.

3-616/1

---

## ருவன்வெல்ல பிரதேச சபை

**ஏக்கருக்கான வரி அறவிடல் - 2013**

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012 ஆம் வருடம் ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13 - II இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2012 ஆம் வருடத்திற்கான மொத்த ஏக்கர் வரி 2012, சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டால் அந்த மொத்த ஏக்கர் வரியில் பத்து வீதம் (10%) கழிவும் ஒவ்வொரு காலாண்டிற்குமான ஏக்கர் வரியினை குறித்த ஒவ்வொரு காலாண்டினதும் முதல் மாதத்தின் கடைசித் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டால் ஐந்து வீதம் (5%) கழிவும் செலுத்தப்படும்.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

### பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் -

(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள ஏக்கர் வரிக்கு உட்படுகின்ற அனைத்து

காணியினதும் 2012 ஆம் வருடத்தில் அமுலாக்கப்பட்ட சரிபார்த்தலை 2013 ஆம் வருடத்தில் சரிபார்த்தலாக ஏற்றுக்கொள்வதற்கும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப குறித்த உப பிரிவின் முதலாம் துணைக் கட்டளையின் கீழ் 1989.03.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் ஏக்கர் வரியினை விதித்தல் மற்றும் அறவிடுதல் விடயமாக உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் விஷேட பிரதேசமொன்றாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஹெக்டயாருக்குக் குறையாது இருந்தும் ஐந்து ஹெக்டயாருக்குக் குறைந்த அனைத்து காணியின் மீதும் ரூபா ஐம்பது (50.00) அளவிற்கேற்றவாரான ஏக்கர் வரியினை மற்றும் 05 ஹெக்டயார்கள் அதற்கு மேற்பட்ட அனைத்து காணிகளினதும் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் ரூபா பத்து (10.00) வீதமான ஏக்கர் வரியினை 2013 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடுவதற்கு ; மற்றும்

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப மேற்குறித்த வரியினை 2013 ஆம் வருடத்தில் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவுருகின்ற நான்கு காலாண்டுகளினுள் சமமான நான்கு (04) தவணைகளில் பிரதேச சபைக்கு செலுத்தும்படி வரிக்கு உட்படுகின்ற ஒரு நபருக்கு கட்டளையிடுவதற்கு ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.

3-616/2

---

## ருவன்வெல்ல பிரதேச சபை

### எவையேனும் கைத்தொழிலொன்றினை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட துணைச் சட்டத்தின்கீழ் 2013 ஆம் வருடத்திற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் மேல் கட்டணங்களை விதித்தல் - 2013

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-III இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2013 ஆம் வருடத்திற்காக விதிக்கப்பட்ட குறித்த வியாபார வரியினை அந்த வருடத்தில் ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

### பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப, ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள், கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் கைத்தொழிலொன்றை 2013 ஆம் வருடத்தில் நடாத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் மேல் குறித்த கைத்தொழிலை நடாத்துகின்ற வளவின் வருடாந்தப் பெறுமதி II ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் எல்லைகளிற்கு உட்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கு நேரான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிற்கேற்பவாரான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடவேண்டுமென ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூபா 750 மிஞ்சாத சந்தர்ப்பத்தில் | ரூபா 750 விட அதிகமாக இருந்தும் ரூபா 1,500 ஐ மிஞ்சாத சந்தர்ப்பத்தில் | ரூபா 1,500 விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. | தேனீர் கடை/கோபி கடையொன்றை நடாத்துதல் | 350 0 | 500 0 | 750 0 |
| 02. | உணவகமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 03. | சிற்றுண்டிச்சாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 04. | சாப்பாட்டுக்கடையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 05. | பேக்கரியொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 06. | விடுதி மற்றும் உணவுச்சாலை ஒன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07. | மாட்டுப் பண்ணை மற்றும் பால் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 08. | மீன் விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 09. | இறைச்சி விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட இறைச்சி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | கோழி மற்றும் பன்றி பண்ணையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | குளிர்பான உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | சலவைச்சாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | சிகை அலங்கார நிலையமொன்றை நடாத்துதல் | | | |
| | கிராமிய | 300 0 | 500 0 | 750 0 |
| | நகர | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | கொல் களமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் விடயங்களிற்காக குறித்த உணவகம், சிற்றுண்டிச்சாலை அல்லது தங்குமிடங்கள் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அறவிடப்படுகின்ற கட்டணம் குறித்த கட்டத்தினை அறவிடப்படுகின்ற வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வருமானத்திற்கேற்ப குறித்த வருமானத்தின் 1% கட்டணமாகும்.

3-616/3

---

**ருவன்வெல்ல பிரதேச சபை**

கைத்தொழில் வரி விதித்தல் - 2013

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-IV இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

**பிரேரணை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப-*

*(அ) ருவன்வெல்ல பிரதேச சபை எல்லைக்குள் 2013 ஆம் வருடத்தில் செய்யப்படுகின்ற இங்கு கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலிற்காகவும் குறித்த கைத்தொழிலை நடாத்துகின்ற வளவின் வருடாந்தப் பெறுமதி குறித்த அட்டவணையின் II ஆம் நிரலில் நேரான குறிப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ள அளவுகளிற்கு ஏற்றவாரான கைத்தொழில் வரியினை 2013, வருடத்தில் விதித்து அறவிடுவதற்கு ;*

*(ஆ) 2012 ஆம் வருடத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி காணப்பட்ட எவையேனும் கைத்தொழில் சம்பந்தமானது எனின் மேலே கூறப்பட்ட வரியினை 2013, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதிக்கு முன் கைத்தொழிலை நடாத்துகின்ற நபரினால் பிரதேச சபைக்கு செலுத்தல் வேண்டும் என்பதை கட்டளையிடுவதற்கு மற்றும்*

*(இ) 2013 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் கைத்தொழில் எனின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரியினை கைத்தொழிலை ஆரம்பித்து (03) மாதத்தினுள் கைத்தொழிலை மேற்கொள்கின்ற நபரினால் பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என கட்டளையிடுவதற்கு ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூபா 750 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம் | ரூபா 750 ஐ விடக் கூடி இருந்தும் ரூபா 1,500 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம் | ரூபா 1,500 விடக் கூடும் சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. | சில்லறை வியாபாரம் (நகரம்) | 500 0 | 750 0 | 1,000 0 |
| | சில்லறை வியாபாரம் (கிராமம்) | 350 0 | 750 0 | 750 0 |
| 02. | கட்டடப் பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 03. | சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 04. | மர விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 05. | விறகு விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 06. | இயந்திரங்கள் மூலம் தச்சன் கம்மாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07. | இயந்திரங்கள் மூலம் மர ஆலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 08. | மின் மற்றும் மின்னியல் பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 09. | வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உருக்குத் தளபாடங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | அரைக்கும் ஆலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | மோட்டார் வாகனம் திருத்தும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | துவிச்சக்கர வண்டி/மோட்டார் சைக்கில்/முச்சக்கர வண்டி திருத்தும் மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | துவிச்சக்கர வண்டி/மோட்டார் சைக்கில்/முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | டயர், டியுப் விற்பனை மற்றும் வொல்கனைஸ் பண்ணும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | மோட்டார் சைக்கில் /முச்சக்கர வண்டி சேவை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூபா 750 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம் | ரூபா 750 ஐ விடக் கூடி இருந்தும் ரூபா 1,500 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம் | ரூபா 1,500 விடக் கூடும் சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 16. | மோட்டார் வண்டி சேவை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | குளிரூட்டல் இயந்திரம், குளிர் சாதனப் பெட்டி, அதிகுளிர் சாதனப் பெட்டி சேவைகள் மற்றும் திருத்தம் செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18. | குடைசல் நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | குடைசல்/ஒட்டு வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | மின் கலங்களை மீள் நிரப்புதல் மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. | அழகு சாதனப் பொருட்கள்/பரிசுப் பொருட்கள்/சாப்புச் சாமான்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. | புடவை விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23. | புடவைகளை நிறச்சாயமிடுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. | ஆடை தைக்கும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25. | துண்டுப் புடவைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. | புத்தகங்கள்/சஞ்சிகைகள்/செய்தித்தாள்/காகிதாதிகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | தொலைபேசி அழைப்புக்களை வாடகைக்கு வழங்கும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. | நிழற் பிரதி செய்தல் மற்றும் லெமினேடிங் செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. | ஸ்டிக்கர்/பெயர்ப்பலகை தயாரித்தல்/விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. | விளம்பர அறிவித்தல் பலகை மற்றும் ஏனைய அறிவித்தல்கள் என்பவைகளை வரையும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. | அச்சகமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32. | புகைப்பட நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33. | நகைகள் விற்பனை மற்றும் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34. | ஆயுர்வேத மருந்து வகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35. | ஆங்கில மருந்து வகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. | செயற்கைப் பல் கட்டும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. | பற்சிகிச்சை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38. | மூக்குக் கண்ணாடிகள் விற்பனை மற்றும் பரிசோதனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39. | அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. | இறப்பர் மற்றும் உள்நாட்டு வாசனைத் திரவியங்கள் கொள்வனவு செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. | கை இயந்திரங்கள் மூலம் இறப்பர் உற்பத்தி செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42. | குஷன் வேலை செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43. | மொத்தமாக பொருட்களை விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. | விலங்குணவுகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |

| *I ஆம் நிரல்* | | *II ஆம் நிரல்* *இடத்தின் வருடாந்தப் பெறுமதி* | | |
|---|---|---|---|---|
| *தொடர் இலக்கம்* | *கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை* | *ரூபா 750 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம்* *ரூபா ச.* | *ரூபா 750 ஐ விடக் கூடி இருந்தும் ரூபா 1,500 ஐ விடக் கூடாத சந்தர்ப்பம்* *ரூபா ச.* | *ரூபா 1,500 விடக் கூடும் சந்தர்ப்பம்* *ரூபா ச.* |
| 45. | தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46. | கருவாடு விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. | கையடக்கத் தொலைபேசி மற்றும் உதிரிப் பாகங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. | பழைய கடதாசிகளை கொள்வனவு செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. | பழைய இரும்பு மற்றும் கண்ணாடி கொள்வனவு செய்யும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. | கடிகாரம் பழுதுபார்த்தல் மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51. | லொத்தர் விற்பனை/மற்றும் விநியோகம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. | வானொலிப்பெட்டி/தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் மின் உபகரணங்கள் திருத்தம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53. | குதிரைப் பந்தயச் சீட்டுக்களை பொறுப்பேற்கும் இடமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54. | தேங்காய், பாக்கு, வெற்றிலை, புகையிலை கொள்வனவு மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 55. | சுருட்டு மற்றும் பீடி உற்பத்தி அல்லது விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56. | மட்பாண்டங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 57. | அழகு நிலையம் ஒன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 58. | உடற் பயிற்சி நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 59. | படங்களை சட்டமிடும் இடமொன்றினை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 60. | சலவை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 61. | ஒளி, ஒலி நாடாக்கள், இருவெட்டுக்கள் பதிவு மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 62. | பாதணிகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 63. | நடமாடும் வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64. | கருங்கல் வேலை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 65. | வாகன நிறம் பூசுதல் மற்றும் பார ஊர்தி மேற்பாகங்களை அமைக்கும் இடங்கள் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66. | விவசாய மருந்துகள் மற்றும் உர விற்பனை வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67. | வெடிப் பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 68. | சுண்ணாம்பு உற்பத்திகளை விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 69. | இறப்பர் துண்டு (ஒட்டுப்பால்) கொள்வனவு செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70. | எரிவாயு விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71. | செங்கற் சூளை ஒன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

**ருவன்வெல்ல பிரதேச சபை**

*வியாபார வரி விதித்தல் - 2013*

*ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-V இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

*எல். எச். சுதத் மஞ்சுள,*
*தவிசாளர்,*
*ருவன்வெல்ல பிரதேச சபை.*

*ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,*
*ருவன்வெல்ல,*
*2012, ஒற்றோபர் மாதம் 30.*

***பிரேரணை***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் -*

*(அ) (1) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை பிரதேசத்தினுள் இங்கு அட்டவணையில் முதலாம் பகுதியில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் வியாபாரமொன்றை 2013 ஆம் ஆண்டில் நடாத்துகின்ற ஒவ்வொரு நபர்கள் மீதும் குறித்த வியாபாரத்தின் 2012 ஆம் ஆண்டின் வருமானத்தினை இரண்டாம் தொகுதியில் (1) ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் எல்லையினுள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இரண்டாம் நிரலில் நேரான குறிப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ள அளவுகளிற்கேற்ப வரியினை விதித்து அறவிடுவதற்கு ; மற்றும்*

*(ஆ) (3) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப வரிக்கு உட்படுகின்ற அனைத்து நபர்களினாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரியினை 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டுமென விதிப்பதற்கு ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.*

*01.* தரகு முகவர்கள்
*02.* ஏல விற்பனையாளர்கள்
*03.* தரகர்கள்
*04.* பணம் கடனுக்கு வழங்குபவர்களின் வியாபாரமொன்றை நடாத்துதல்
*05.* அடகுப் பொருட்களை பெறும் வியாபாரமொன்றை நடாத்துதல்
*06.* வழங்குனர்கள்
*07.* போக்குவரத்து சேவைகளை வழங்குதல்
*08.* மோட்டார் வாகனங்கள் விற்பனை செய்பவர்களின் வியாபாரமொன்றை நடாத்துதல்
*09.* சாரதிப் பயிற்சி நிறுவனமொன்றை நடாத்துதல்
*10.* பணம் முதலீடு செய்யும் வியாபாரமொன்றினை நடாத்துதல்
*11.* வங்கி, நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளை நடாத்துதல்
*12.* ஒப்பந்தக்காரர்களின் வியாபாரமொன்றை நடாத்துதல்
*13.* தனியார் கல்வி நிறுவனமொன்றை நடாத்துதல்
*14.* வேலை முகவர் வியாபாரமொன்றினை நடாத்துதல் (உள்நாடு/வெளிநாடு)
*15.* நிபுணத்துவ வைத்திய சேவையொன்றினை நடாத்துதல்
*16.* ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வியாபாரமொன்றினை நடாத்துதல்
*17.* மருந்துகள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றினை நடாத்துதல்
*18.* மருந்தகம் ஒன்றை நடாத்துதல் (மேற்கத்திய)
*19.* மருந்தகம் ஒன்றை நடாத்துதல் (ஆயுர்வேத)
*20.* விழாப் பொருட்களை வழங்கும் இடமொன்றினை நடாத்துதல்
*21.* வரவேற்பு மண்டபம் ஒன்றை நடாத்துதல்
*22.* வீட்டு வரைபடங்களை வரையும் நிறுவனமொன்றினை நடாத்துதல்
*23.* வாடகைக்கார், சொந்தக்காரர்கள்
*24.* லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் இடமொன்றினை நடாத்துதல்
*25.* எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றினை நடாத்துதல்
*26.* மதுசாரம் மற்றும் வெளிநாட்டு சாராய வகைகளை விற்பனை செய்யும் இடமொன்றினை நடாத்துதல்

27. மரண சேவைகளை வழங்குதல்
28. குடிநீர் நிரப்பும் நிலையமொன்றினை நடாத்துதல் மற்றும் விற்பனை செய்தல்
29. சிறப்புக் கடைத்தொகுதிகளை நடாத்துதல்
30. கிரேப் இறப்பர் உற்பத்தி செய்யும் நிலையமொன்றினை நடாத்துதல்
31. இறப்பர் தொழிற்சாலையொன்றை நடாத்துதல்
32. தேயிலைத் தொழிற்சாலையொன்றை நடாத்துதல்
33. ஆடைத் தொழிற்சாலையொன்றை நடாத்துதல்
34. இயந்திரங்கள் மூலம் கருங்கற்கள் உடைக்கும் மற்றும் அரைக்கும் இடமொன்றினை நடாத்துதல்
35. புகை பரிசீலிக்கும் இடமொன்றினை நடாத்துதல்
36. முகவர் தபாலகமொன்றினை நடாத்துதல்
37. விற்பனைக் காட்சியறையொன்றினை நடாத்துதல்
38. ஏதேனும் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஒருவராக செயற்படுதல்
39. ஏதேனும் ஒரு பொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
40. இறக்குமதி அல்லது ஏற்றுமதி வியாபாரமொன்றினை நடாத்துதல்

**இரண்டாம் பகுதி**

| தொடர் இலக்கம் | I ஆம் நிரல்<br>2012 ஆம் வருடத்தில் வியாபாரத்தின் வருமானம் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூபா ச. |
|---|---|---|
| 01. | ரூபா 6,000 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் | எதுவும் இல்லை |
| 02. | ரூபா 6,000 ஐ விட அதிகரிக்கின்ற இருந்தும் ரூபா 12,000 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் | 90 0 |
| 03. | ரூபா 12,000 ஐ விட அதிகரிக்கின்ற இருந்தும் ரூபா 18,750 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் | 180 0 |
| 04. | ரூபா 18,750 ஐ விட அதிகரிக்கின்ற இருந்தும் ரூபா 75,000 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் | 360 0 |
| 05. | ரூபா 75,000 ஐ விட அதிகரிக்கின்ற இருந்தும் ரூபா 150,000 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் | 1,200 0 |
| 06. | ரூபா 150,000 ஐ விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் | 3,000 0 |

03-616/5

---

**ருவன்வெல்ல பிரதேச சபை**

வாகனங்கள் மற்றும் விலங்குகளுக்கு வரி விதித்தல் - 2013

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-VI இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

இதன்படி ருவன்வெல்லபிரதேச சபை அதிகார எல்லைக்குள் இவ்வரிக்கு உட்படுகின்ற எவையேனும் ஒரு வாகனம் அல்லது பிராணியொன்றினை வைத்துக்கொள்ளும் அனைத்து நபர்களினாலும், குறித்த வாகனம் அல்லது பிராணியினை தமது பொறுப்பில் வைத்திருக்கின்ற நாட்களின் எண்ணிக்கை 30 நாட்கள் பூரணமானதும் 2013 ஆம் வருடத்திற்கான இவ் வரியினை ருவன்வெல்ல பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டுமெனவும் மேலும் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் உப பிரிவுடன் வாசிக்கவேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆம் பிரிவு மற்றும் நான்காம் அட்டவணையின் ஏற்பாடுகளின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2013 ஆம் வருடத்தில் கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் வாகனம் அல்லது

*மிருகத்தினை தமது பொறுப்பில் வைத்துக்கொள்ளும் அனைவர் மீதும் அதன் II ஆம் நிரலில் நேரான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரியொன்றினை 2013 ஆம் வருடத்திற்காக விதித்து அறவிடுவதற்கு முன்மொழிகின்றது.*

**அட்டவணை (148 ஆம் பிரிவு)**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| | ரூபா ச. |
| ஒரு மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் ட்ரைகார், ஒரு மோட்டார் லொறி, ஒரு மோட்டார் சைக்கில், ஒரு வண்டில், ஒரு ரிக்ஷோ, ஒரு துவிச்சக்கர வண்டி அல்லது ஒரு ட்ரைசிகல் அல்லாத அனைத்து வாகனங்களிற்காகவும் | 25 0 |
| அனைத்து துவிச்சக்கரவண்டிகள் அல்லது ட்ரைசிகல் அல்லது பைசிகல் கார் அல்லது வண்டில்களிற்காக | |
| (அ) வியாபார நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுவதாயின் | 18 0 |
| (ஆ) வியாபார நடவடிக்கைகள் அல்லாத விடயங்களிற்காக உபயோகிக்கப்படுவதாயின் | 4 0 |
| அனைத்து வண்டில்களிற்காக | 20 0 |
| அனைத்து கை வண்டில்களிற்காக | 10 0 |
| அனைத்து ரிக்ஷோவிற்காக | 7 50 |
| அனைத்து குதிரை, போனி அல்லது கழுதை | 15 0 |
| அனைத்து யானைகளிற்காக | 50 0 |

விட்டம் 26 அங்குலங்களை விடக் கூடாத சில்லுகளையுடைய குழந்தை வாகனங்கள், வீல்பரோ தனியார் இடங்களில் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துகின்ற கை வண்டில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாத கை வண்டில்கள் இவ்வரியிலிருந்து விளக்களிக்கப்படும்.

*03-616/6*

---

**ருவன்வெல்லை பிரதேச சபை**

படிவக் கட்டணங்கள் மற்றும் ஏனைய சேவைகளிற்காக கட்டணங்கள் அறவிடுதல் - 2013

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-VII இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

**பிரேரணை**

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2013.01.01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை விதிப்பதற்கு முன்மொழிகின்றது.

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | வீதி எல்லை மற்றும் உரித்தளிக்காமை சான்றிதழ் கட்டணம் | 250 0 |
| 2. | வீதி எல்லை மற்றும் உரித்தளிக்காமை சான்றிதழ் விண்ணப்பப் படிவக் கட்டணம் | 50 0 |
| 3. | கட்டட வரைபடங்களை அனுமதிக்கும் விண்ணப்பப் படிவக் கட்டணம் | |
| | நகர | 350 0 |
| | நகரம் அல்லாத | 150 0 |

| | | ரூபா ச. |
|---|---|---|
| 4. | காணியின் வரைபடத்தினை அனுமதிக்கும் விண்ணப்பப் படிவக் கட்டணம் | |
| | நகரம் | 100 0 |
| | நகரம் அல்லாத | 50 0 |
| 5. | அபாயகரமான மரங்களை அகற்றுவதற்காக விண்ணப்பப்படிவக் கட்டணம் | |
| | பலா மரத்தினை வெட்டுதல் | 150 0 |
| | பலா மரம் அல்லாத | 50 0 |
| 6. | மதிப்பீட்டு வரி இடாப்பில் பெயர் மாற்றம் செய்யும் விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50 0 |
| 7. | மதிப்பீட்டு வரி அறிக்கைகளை விநியோகிப்பதற்கான கட்டணங்கள் | 50 0 |
| 8. | இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் | |

| | | ரூபா | |
|---|---|---|---|
| | * அதிர்வு இயந்திரம் (தட்டு) ஒரு நாளைக்கு | 1,500 | |
| | * அதிர்வு இயந்திரம் (உருளை) ஒரு நாளைக்கு | 2,500 | |
| | * பெகோ இயந்திரம் - ஒரு மணித்தியாலயத்திற்கு | 2,000 | (பெ. சே. வரி உட்பட) |
| | * மல "கலி" பவுசர் (ஒரு தாங்கிக்காக) | | |
| (i) | மதிப்பீட்டு வரி எல்லைக்குள் | 5,000 | (பெ. சே. வரி உட்பட) |
| (ii) | பிரிவிற்குள் | 6,000 | |
| (iii) | பிரிவிற்கு வெளியில் | 7,000 | |

பிரிவிற்கு வெளியில் சேவைக்காக செல்லும் போது போவதற்கு மற்றும் திரும்பி வருவதற்காக ஒரு கி. மீ. இற்கு ரூபா 150.00 வீதம் தூரத்திற்கு ஏற்ப கட்டணங்கள் அறவிடப்படும்.

9. 2013 ஆம் வருடத்திற்காக நகரம் அல்லாத பிரதேசங்களில் கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மானங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற முன் விதிக்கப்பட்ட கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறவிடப்படும்.

| கட்டடத்தின் நில அளவு | | வசிப்பிடக் கட்டடங்களிற்காக | வியாபார/ஏனைய கட்டடங்களிற்காக |
|---|---|---|---|
| சதுர மீற்றர் | சதுர அடி | கட்டணம் ரூபா ச. | கட்டணம் ரூபா ச. |
| 45 குறைய | 500 குறைய | 350 0 | 650 0 |
| 46-90 | 501-1000 | 1,000 0 | 1,500 0 |
| 91-180 | 1001-2000 | 1,500 0 | 2,500 0 |
| 181-270 | 2001-3000 | 2,500 0 | 3,000 0 |
| 271-450 | 3001-5000 | 3,000 0 | 4,000 0 |
| 451-675 | 5001-7500 | 4,000 0 | 6,000 0 |
| 676-900 | 7501-10000 | 5,000 0 | 8,000 0 |
| 900 மேல் | 10000 மேல் | 6,000 0 | 10,000 0 |
| | | $m^2$ 100 இற்கு மேற்படுகின்ற அனைத்து $m^2$ இற்கும் ரூபா 250 00 வீதம் அறவிடுதல் வேண்டும் | $m^2$ 100 இற்கு மேற்படுகின்ற அனைத்து$m^2$ இற்கும் ரூபா 500.00 வீதம் அறவிடுதல் வேண்டும் |

பாதுகாப்பு வேலிகளிற்காக முன் நியமிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல் :

| | வசிப்பிடக் கட்டடங்களிற்காக கட்டணம் ரூபா ச. | வியாபார/ஏனைய கட்டடங்களிற்காக கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| கட்டடம் எல்லைக்கு வெளியில் | 200 0 | 200 0 |
| கட்டடம் எல்லைக்குள் | 300 0 | 400 0 |

கட்டட விண்ணப்பப் படிவங்களை காலத்தை நீடிப்பதற்காக அறவிடப்படுகின்ற தொகை ஒரு வருடத்திற்கு ரூபா 250.00 ஆகும்.

3-616/7

## ருவன்வெல்ல பிரதேச சபை

விளம்பர அறிவித்தல்கள் /கற்புலன்சூழல் சம்பந்தமான துணைச் சட்டம்

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2012, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 05-13-VIII இன் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

ருவன்வெல்ல பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2012, ஒற்றோபர் மாதம் 30.

### பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் இலக்க (1) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப 1988.08.23 ஆந் திகதி கொண்ட 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மானங்கள் கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியம துணைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில் விளம்பர அறிவித்தல்கள்/ கற்புலன் சூழல் சம்பந்தமான துணைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் எவையேனும் ஒரு வீதியில், பாதையில் ஓடைக்கு, குளத்திற்கு, கடலிற்கு அல்லது வாணிற்கு தெரியும் விதமாக விளம்பரம் ஒன்றை காட்சிப்படுத்துவதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரக் கட்டணமொன்றை 2013 ஆம் வருடம் முதல் அறவிடுவதற்கு முன்மொழிகின்றது.

### அட்டவணை

| | | ரூபா ச. |
|---|---|---|
| 01. | ஒரு சுவரில் அல்லது பலகையில் மரம் அல்லது கல்வனைஸ் குழாய்களை இட்டு அல்லது கொங்கிரீட் தூண்களில் பொருத்தப்படுகின்ற நிலையான விளம்பர அறிவித்தல் பலகையொன்றிற்காக ஒரு சதுர அடிக்கு ஒரு வருடத்திற்கு | 50 0 |
| 02. | புடவையில் வரையப்பட்ட அல்லது டிஜிடல் அச்சு மூலம் தயாரிக்கப்பட்ட ஏனைய எவையேனும் பதாகை ஒன்றை காட்சிப்படுத்துவதற்காக ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 25 0 |

3-616/8

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.